# மெட்ரோ ரயில் சார்பில் பொங்கல் கலை விழா இன்று தொடக்கம்

**சென்னை**

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் வரும் 9, 10, 11-ம் தேதிகளில் மாலை 5.45 முதல் இரவு 8.30 மணி வரையில் தென்னகப் பண்பாட்டு மையத்துடன் இணைந்து பொங்கல் கலை விழா நடத்தப்படுகிறது.

சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் 9-ம் தேதி மாலை கேரள மாநிலம் பையனூரை சேர்ந்த சிகாபுதீன் குழுவினரின் திருவா திரைக் களி, ஒப்பனா நடனம், கர்நாடக மாநிலம் சிமோகாவை சேர்ந்த பூதியப்பா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடனம், செல்வம் குழுவினரின் தப்பாட்டம் நிகழ்ச்சிகள் நடக்கவுள்ளன.

மேற்கண்ட 3 கலை குழுவின ரும் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் 10-ம் தேதியும், திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலை யத்தில் 11-ம் தேதியும் மாலை 5.45 மணி முதல் இரவு 8.30 மணி வரை யிலும் கலை நிகழ்ச்சிகளை நடத்த வுள்ளனர். அனுமதி இலவசம்.